மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி

முன்னிலை : திரு இ. செல்வராஜ்., B.C.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

-------

2019-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 01ம் நாள் வெள்ளிக்கிழமை
திருவள்ளுவராண்டு 2050, ஸ்ரீவிளம்பி வருடம் தை மாதம் 19 ஆம்நாள்

------

**அசல் வழக்கு எண். 168/2017**

ஆர். வேணுகோபால் ...வாதி....

...எதிர்....

எம். ஜெயராமன் ...பிரதிவாதி...

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 22.01.2019 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். சுந்தரய்யா அவர்களும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஆத்மநாதன் அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்து இதுநாள்வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

தீர்ப்புரை

பிரதிவாதியிடமிருந்து தாவாத் தொகை ரூ.63,500/-யை பின்வட்டி மற்றும் செலவுத்தொகையுடன் வசூலிப்பதற்காக இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வழக்குரையின் சுருக்கம்

வாதியிடம் பிரதிவாதி 06.04.2015 அன்று ரூ.50,000/- கடனாக பெற்றுக்கொண்டு அன்றைய தேதியிலேயே வாதிக்கு பிரதிவாதி ஒரு முத்திரைத்தாளில் கடனுறுதிச்சீட்டை எழுதிக் கொடுத்துள்ளார். வாதியிடம் பெற்ற கடன் தொகைக்கு ரூ.100/-க்கு மாத வட்டியாக ரூ.1/- வீதம் வட்டி மற்றும் அசல் தொகையை வாதியிடம் செலுத்திவிடுவதாக பிரதிவாதி உறுதியளித்துள்ளார். தாவா கடனுறுதிச்சீட்டின்படி எவ்வித அசல் மற்றும் வட்டித் தொகையையும் பிரதிவாதி வாதிக்கு செலுத்தவில்லை. வாதியிடம் பெற்ற கடன் தொகையை திருப்பிச் செலுத்தும்படி வாதி பிரதிவாதியை பலமுறை கேட்டபொழுதும் கடன் தொகையை வட்டியுடன் திருப்பிச் செலுத்தாமல் காலதாமதம் செய்து வந்ததால் வாதி 30.05.2017 அன்று தனது வழக்கறிஞர் மூலம் ஒரு அறிவிப்பை அனுப்பினார். அந்த அறிவிப்பை பெற்றுக்கொண்ட பிரதிவாதி எவ்வித பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை. வாதியிடம் பெற்ற கடன் தொகையையும் திருப்பிச் செலுத்தவில்லை. வாதியிடம் பிரதிவாதி பெற்ற கடன்

தொகையை வட்டியுடன் பெறுவதற்காக வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. எதிர்வழக்குரைச் சுருக்கம்

வாதியிடம் பிரதிவாதி எவ்வித கடன் தொகையும் பெற்றுக்கொண்டு எவ்வித கடனுறுதிச்சீட்டும் வாதிக்கு பிரதிவாதி எழுதிக்கொடுக்கவில்லை. தாவா கடனுறுதிச்சீட்டில் உள்ள கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை. தாவா கடனுறுதிச்சீட்டில் முகவரியில்லாமல் சாட்சிக் கையொப்பம் இட்டுள்ளவர்களை பிரதிவாதிக்கு தெரியாது. பிரதிவாதி நிம்மேலி கிராமம், பெரியார் தெருவில் கடந்த 45 ஆண்டுகளாக நிரந்தரமாக வசித்து வரும்நிலையில் தாவா கடனுறுதிச்சீட்டில் நிம்மேலி, மேலத்தெரு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வாதியும், பிரதிவாதியும் BSNL நிறுவனத்தில் வேலை பார்த்து வந்ததால் வாதியை பிரதிவாதிக்குத் தெரியும். பிரதிவாதி நல்ல சம்பளம் பெற்று வந்ததால் வாதியிடம் கடன் வாங்க வேண்டிய அவசியமில்லை. தாவா கடனுறுதிச்சீட்டை வாதியும், அவரது மகனும் சேர்ந்து மோசடியாக தயார் செய்து தாக்கல் செய்துள்ளனர். வாதி அனுப்பிய அறிவிப்பில் பிரதிவாதியின் முகவரி தவறாக இருந்ததாலும், வாதியிடம் எவ்வித கடனும் பிரதிவாதி பெறாத காரணத்தினாலும் வாதிக்கு பிரதிவாதி எவ்வித கடனுறுதிச்சீட்டும் எழுதிக் கொடுக்காத காரணத்தினாலும் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை. வாதிக்கு பிரதிவாதி எவ்வித கடன் தொகையும் செலுத்த வேண்டியதில்லை. வழக்கை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இவ்வழக்கின் வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையை பரிசீலனை செய்து கீழ்க்கண்ட எழுவினாக்கள் தீர்வுக்காக வனையப்பட்டன

1. வாதியிடம் பிரதிவாதி ரூ.50,000/- கடன் பெற்றுள்ளாரா?

2. வாதிக்கு பிரதிவாதி தாவா கடனுறுதிச்சீட்டை எழுதிக் கொடுத்துள்ளாரா?

3. வாதி இவ்வழக்கில் கோரியுள்ளபடி தாவாத்தொகை பின்வட்டியுடன் வாதிக்கு கிடைக்கக்கூடியதா?

4. தரப்பினர்களுக்கு வேறு என்ன பரிகாரம் கிடைக்கக்கூடியது?

5. இவ்வழக்கில் வாதி தரப்பில் வா.சா.1 மற்றும் வா.சா.2 சாட்சியம் அளித்துள்ளனர். வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியிடப்பட்டுள்ளன. பிரதிவாதி தரப்பில் பி.சா.1 சாட்சியம் அளித்துள்ளார். பிரதிவாதி தரப்பில் சான்றாவணங்கள் குறியிடப்படவில்லை.

6. எழுவினாக்கள் 1 முதல் 3

இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்குக்கோப்பு பரிசீலிக்கப்பட்டது. வாதியிடமிருந்து

பிரதிவாதி 06.04.2015 அன்று ரூ.50,000/- கடனாகப் பெற்றுக்கொண்டு வாதிக்கு ஒரு கடனுறுதிச்சீட்டு எழுதிக் கொடுத்துள்ளதாகவும், வாதியிடம் பெற்ற கடனை பிரதிவாதி திருப்பிச் செலுத்தாத காரணத்தினால் வாதி 30.05.2017 அன்று ஒரு அறிவிப்பை பிரதிவாதிக்கு அனுப்பி அந்த அறிவிப்பை பெற்றுக்கொண்ட பின்னரும் பிரதிவாதி வாதிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை திருப்பிச் செலுத்தவில்லை என்றும் வாதி தனது வழக்குரை மற்றும் சாட்சியத்தில் கூறியுள்ளார்.

7. வாதியிடம் பிரதிவாதி எவ்வித கடன் தொகையும் பெறவில்லை என்றும், வாதிக்கு பிரதிவாதி எவ்வித கடனுறுதிச்சீட்டும் எழுதிக் கொடுக்கவில்லை என்றும், வாதி தனது உறவினர்கள் மற்றும் மகனின் துணையுடன் மோசடியாக கடனுறுதிச்சீட்டை தயார் செய்து இவ்வழக்கைத் தாக்கல் செய்துள்ளார் என்றும் பிரதிவாதி தனது எதிர்வழக்குரை மற்றும் சாட்சியத்தில் கூறியுள்ளார். வாதியிடமிருந்து பிரதிவாதி ரூ.50,000/- கடன் பெற்றுக்கொண்டு 06.04.2015 அன்று கடனுறுதிச்சீட்டு எழுதிக் கொடுத்துள்ளாரா என்பதையும், பிரதிவாதியிடமிருந்து வாதி தாவாத் தொகையை பெறத்தக்கவரா என்பதையும் தீர்வு காண வேண்டியுள்ளது.

8. வாதியும் பிரதிவாதியும் BSNL நிறுவனத்தில் வேலை பார்த்து வந்ததாகவும், வாதியிடம் பிரதிவாதி கடன் கேட்டதாகவும்,11.12.2014 அன்று பிரதிவாதிக்கு வாதி ரூ.80,000/- கடன் கொடுத்ததாகவும், அதன்பின்னர் தாவா கடனுறுதிச்சீட்டை எழுதிக்கொடுத்து 06.04.2015 அன்று மேலும் ரூ.50,000/- கடன் பெற்றதாகவும் வாதி தனது வழக்குரையில் கூறியுள்ளார்.

9. வா.சா.1 தனது சாட்சியத்தில், ".. பிரதிவாதி என்னிடம் எப்பொழுது பணம் கேட்டார் என்றால் 06.04.2015-க்கு ஒரு வாரத்திற்கு முன்னர் எனது வீட்டிற்கு வந்து பணம் கேட்டார். எத்தனை மணிக்கு பிரதிவாதி எனது வீட்டிற்கு பணம் கேட்க வந்தார் என்றால் காலையிலேயே வந்துவிடுவார்..." என்றும், மேலும், "... அதன்பின்னர் நான் பணம் ஏற்பாடு செய்துகொண்டு 06.04.2015 அன்று வரச் சொன்னேன்..." என்றும், மேலும், "... நான் பணம் ஏற்பாடு செய்துகொண்டு பிரதிவாதியை போன் செய்து வரச்சொன்னேனா என்றால் பிரதிவாதியே வந்துவிடுவார்..." என்றும் கூறியுள்ளார்.

10. வா.சா.2 தனது சாட்சியத்தில், "... பிரதிவாதி எந்தத் தேதியில் பணம் வாங்கினார் என்றால் 11.12.2014 அன்று கடன் வாங்கினார். பிரதிவாதி கடனாக எவ்வளவு வாங்கினார் என்றால் ரூ.80,000/- கடனாக வாதியிடம் வாங்கினார்..." என்றும் கூறியுள்ளார்.

11. வாதியிடம் பிரதிவாதி 06.04.2015 அன்று ரூ.50,000/- கடன் பெற்றுக்கொண்டு ஒரு கடனுறுதிச்சீட்டை வாதிக்கு எழுதிக் கொடுத்துள்ளதாக இந்த வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார். தாவா கடனுறுதிச்சீட்டில் சாட்சிக் கையொப்பம் இட்டுள்ளதாகக் கூறி வாதி தரப்பில் விசாரணை

செய்யப்பட்டுள்ள வா.சா.2 தனது சாட்சியத்தில் வாதியிடம் பிரதிவாதி 11.12.2014 அன்று ரூ.80,000/- கடன் பெற்றதாகக் கூறியுள்ளார். வாதியிடம் பிரதிவாதி 06.04.2015 அன்று ரூ.50,000/- கடன் பெற்றதாக வாதி கூறியுள்ளதை பிரதிவாதி மறுத்து வாதியிடம் எவ்வித கடன் தொகையும் பெறவில்லை என்று எதிர்வழக்குரையில் கூறியுள்ளநிலையில் வாதியிடம் பிரதிவாதி பெற்றதாகக் கூறும் கடன்தொகை மற்றும் தேதி குறித்து வா.சா.1 மற்றும் வா.சா.2-ன் சாட்சியத்தில் முரண்பாடு உள்ளது. மேலும் கடன்தொகை பெறுவதற்கு பிரதிவாதி வந்தார் என்று வா.சா.1 தனது சாட்சியத்தில் கூறவில்லை. பிரதிவாதி வந்துவிடுவார் என்றுதான் கூறியுள்ளார். அப்படியென்றால் 06.04.2015 அன்று பிரதிவாதி வாதியிடம் கடன் பெற வந்தாரா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

12. வா.சா.1 தனது சாட்சியத்தில், "... 06.04.2015 அன்று பிரதிவாதி எனது வீட்டிற்கு வந்தார். எத்தனை மணிக்கு பிரதிவாதி எனது வீட்டிற்கு வந்தார் என்றால் 12 மணிக்கு வந்தார். பிரதிவாதி எனது வீட்டிற்கு வந்தபொழுது யார் யார் இருந்தார்கள் என்றால் கிருஷ்ணமூர்த்தி, கண்ணன் ஆகியோர் இருந்தனர். மேலும் யாராவது இருந்தார்களா என்றால் எனது மகன் குமார் இருந்தார்..." என்றும், மேலும், "... வா.சா.ஆ.1-ல் யார் முதலில் கையொப்பம் இட்டது என்றால் கிருஷ்ணமூர்த்தி என்பவர் முதலில் கையொப்பம் இட்டார். அதன் பின்னர் பிரதிவாதி கையொப்பம் இட்டார். அதன்பின்னர் கண்ணன் கையொப்பம் இட்டார். கடைசியாக எனது மகன் கையொப்பம் இட்டார்..." என்று கூறியுள்ளார்.

13. வா.சா.2 தனது சாட்சியத்தில், "... தாவா புரோநோட்டில் யார் முதலில் கையொப்பம் இட்டது என்றால் பிரதிவாதிதான் முதலில் கையொப்பம் இட்டார்..." என்றும், மேலும், "...தாவா புரோநோட்டில் பிரதிவாதி கையொப்பம் இட்டபின்னர் நான் கையொப்பம் இட்டேன்..." என்றும், மேலும், "...பிரதிவாதி தமிழில்தான் கையொப்பம் இட்டார்..." என்றும் கூறியுள்ளார்.

14. வாதி தனது சாட்சியத்தில் தாவா கடனுறுதிச்சீட்டில் முதலில் வா.சா.2 கிருஷ்ணமூர்த்தி என்பவர்தான் கையொப்பம் இட்டதாக கூறியுள்ளார். ஆனால் வா.சா.2 தனது சாட்சியத்தில் தாவா கடனுறுதிச்சீட்டில் பிரதிவாதிதான் முதலில் கையொப்பம் இட்டதாகவும், தாவா கடனுறுதிச்சீட்டில் பிரதிவாதி தமிழில் கையொப்பம் இட்டதாகவும் கூறியுள்ளார். ஆனால் வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் உள்ள கையொப்பமானது ஆங்கிலத்தில் உள்ளது. தாவா கடனுறுதிச்சீட்டில் பிரதிவாதி கையொப்பம் இட்டது குறித்து வா.சா.1 மற்றும் வா.சா.2-ன் சாட்சியத்தில் முரண்பாடு உள்ளது.

15. வா.சா.1 தனது சாட்சியத்தில், "... நான் கிருஷ்ணமூர்த்தியையும், கண்ணனையும் போன் செய்து வரச்சொன்னேனா என்றால் போன் செய்தும் வரச் சொல்லுவேன். அவர்களாகவேவும் சில நேரங்களில் வருவார்கள்..." என்றும், மேலும், "... வா.சா.ஆ.1 எழுதப்பட்ட தேதியன்று

கிருஷ்ணமூர்த்தியையும், கண்ணனையும் நான் போன் செய்து வரச்சொன்னேன். நான் எப்பொழுது அவர்களுக்கு போன் செய்தேன் என்றால் முதல் நாளே போன் செய்தேன்.." என்று கூறியுள்ளார்.

16. வா.சா.2 தனது சாட்சியத்தில், "... நான் எப்பொழுது வாதியின் வீட்டிற்கு வந்தேன் என்றால் அடிக்கடி வருவேன். தாவா புரோ நோட்டை எழுதிய நாளன்று வாதி என்னை வரச் சொன்னாரா என்றால் இல்லை. நான்தான் வந்தேன். அன்றையதினம் வாதியின் வீட்டிற்கு எதற்காக வந்தேன் என்றால் எனது அக்காளின் வீடு என்பதால் அவர்களைப் பார்க்க வந்தேன்..." என்று கூறியுள்ளார்.

17. தாவா கடனுறுதிச்சீட்டு எழுதப்பட்ட தேதியன்று வா.சா.2-யை வரச்சொல்லி வாதி முதல்நாளே போன் செய்ததாக வாதி தனது சாட்சியத்தில் கூறியுள்ளநிலையில் தாவா கடனுறுதிச்சீட்டு எழுதப்பட்ட தேதியன்று வா.சா.2-யை வரச்சொல்லி வாதி போன் செய்யவில்லை என்றும், வா.சா.2-ன் அக்காள் வீடு என்பதால் அவர்களைப் பார்க்க வாதியின் வீட்டிற்கு வா.சா.2 வந்ததாகவும் வா.சா.2 சாடசியமளித்துள்ளார். தாவா கடனுறுதிச்சீட்டில் சாட்சிக்கையொப்பம் இடுவதற்கு வா.சா.2-யை அழைத்த விபரம் குறித்து வாதியின் சாட்சியத்திற்கும், வா.சா.2-ன் சாட்சியத்திற்கும் முரண்பாடு உள்ளது.

18. வா.சா.1 தனது சாட்சியத்தில், "..எத்தனை மணிக்கு பிரதிவாதி எனது வீட்டிற்கு வந்தார் என்றால் 12 மணிக்கு வந்தார். பிரதிவாதி எனது வீட்டிற்கு வந்தபொழுது யார் யார் இருந்தார்கள் என்றால் கிருஷ்ணமூர்த்தி, கண்ணன் ஆகியோர் இருந்தனர்..." என்று கூறியுள்ளார்.

19. வா.சா.2 தனது சாட்சியத்தில், "... அன்றையதினம் வாதியின் வீட்டிற்கு எத்தனை மணிக்கு நான் வந்தேன் என்றால் 12 மணிக்கு மேல்தான் வந்தேன். நான் வாதியின் வீட்டிற்கு வந்தபொழுது என்ன நடந்தது என்றால் வாதியிடம் பிரதிவாதி பணம் கேட்டுக் கொண்டிருந்தார்..." என்றும், மேலும், "... எத்தனை மணிக்கு பிரதிவாதிக்கு வாதி பணம் கொடுத்தார் என்றால் 12 மணிக்கு மேல் நான் வருவேன். அப்பொழுது பணம் கொடுப்பார்..." என்றும் கூறியுள்ளார்.

20. வாதிக்கு பிரதிவாதி தாவா கடனுறுதிச்சீட்டை எழுதிக் கொடுத்தாகக் கூறப்படும் தேதியன்று 12 மணிக்கு வாதியின் வீட்டிற்கு பிரதிவாதி வந்ததாகவும், அப்பொழுது வா.சா.2 கிருஷ்ணமூர்த்தி, கண்ணன் ஆகியோர் வாதியின் வீட்டில் இருந்ததாகவும் வா.சா.1 தனது சாட்சியத்தில் கூறியுள்ளநிலையில் வா.சா.2 வாதியின் வீட்டிற்கு வந்தபொழுது பிரதிவாதி ஏற்கனவே வாதியின் வீட்டிற்கு வந்து வாதியிடம் கடன் கேட்டுக் கொண்டிருந்ததாக தனது சாட்சியத்தில் கூறியுள்ளார். வாதியின் வீடடிற்கு பிரதிவாதி கடன்பெற வந்தார் என்பது குறித்து வாதி ( வா.சா.1) மற்றும் வா.சா.2-ன் சாட்சியத்தில் முரண்பாடு உள்ளது. மேலும் வா.சா.2 தனது சாட்சியத்தில் வாதி பிரதிவாதியிடம் கடனாக

பணம் கொடுத்தார் என்று கூறவில்லை. வா.சா.2 வாதியின் வீட்டிற்கு 12 மணிக்குமேல் வருவேன் என்றும், அப்பொழுது பணம் கொடுப்பார் என்றும் எதிர்காலத்தில் வா.சா.2 சாட்சியம் அளித்துள்ளார்.

21. வா.சா.1 தனது சாட்சியத்தில், "... வா.சா.ஆ.1-ல் உள்ள 1-வது சாட்சி கிருஷ்ணமூர்த்தி என்பவரின் தகப்பனார் குஞ்சு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.2-ன் முதன்மை நிரூபண வாக்குமூலத்தில் கிருஷ்ணமூர்த்தி என்பவரின் தகப்பனார் பெயர் குச்சப்பா என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்..." என்று கூறியுள்ளார்.

22. வா.சா.2 தனது சாட்சியத்தில், "... எனது தகப்பனாரின் பெயர் குச்சப்பா என்றால் சரியல்ல. குஞ்சப்பா ஆகும். இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள முதன்மை நிரூபண வாக்குமூலத்தில் உள்ள எனது கையெழுத்திற்கும், வா.சா.ஆ.1-ல் வா.சா.ஆ.4ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள கையொப்பத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். முதன்மை நிரூபண வாக்குமூலத்தில் சுருக்கமாக கையொப்பம் இட்டுள்ளேன். வா.சா.ஆ.1-ல் எனது தகப்பனாரின் பெயர் குஞ்சு என்று குறிப்பிடப்படடுள்ளது என்றால் சரிதான்..." என்று கூறியுள்ளார்.

23. வா.சா.ஆ.1-ல் முதல் சாட்சியாக கையொப்பம் இட்டுள்ள நபரின் தகப்பனார் பெயர் குஞ்சு என்றுதான் வா.சா.ஆ.1ல் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.2-ன் தகப்பனார் பெயர் குச்சப்பா என்று முதன்மை நிரூபண வாக்குமூலத்திலும், குஞ்சப்பா என்று வா.சா.2-ன் சாட்சியத்திலும் கூறியுள்ளனர். வா.சா.ஆ.1-ல் முதல் சாட்சியாக வா.சா.2 சாடசிக் கையொப்பம் இட்டாரா என்பது சந்தேகத்திற்குரியதாக உள்ளது. ஏனெனில் வா.சா.2-ன் தகப்பனார் பெயர் வா.சா.ஆ.1-ல் குறிப்பிடப்படவில்லை. மேலும் வா.சா.ஆ.1-ல் சாட்சிக் கையொப்பம் இட்டுள்ளவர்களின் முகவரி குறிப்பிடப்படவில்லை. வா.சா.ஆ.1-ல் சாட்சிகளின் முகவரி குறிப்பிடப்படாதநிலையில் இவ்வழக்கில் சாட்சியம் அளித்துள்ள வா.சா.2-தான் வா.சா.ஆ.1-ல் சாட்சிக் கையொப்பம் இட்டுள்ளதாக கூறமுடியாது.

24. வாதியிடம் பிரதிவாதி கடன் தொகை பெற்றுக்கொண்டு தாவா கடனுறுதிச்சீட்டை வாதிக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்பதை நிரூபணம் செய்யும்வகையில் வாதி தரப்பு சாட்சியம் அமையவில்லை. வாதி தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ள வா.சா.1 மற்றும் வா.சா.2-ன் சாட்சியத்தில் பெருத்த முரண்பாடு உள்ளது. வாதியிடம் பெற்ற கடன்தொகையை திருப்பிச் செலுத்த வேண்டி பிரதிவாதிக்கு வாதி வா.சா.ஆ.2 அறிவிப்பை அனுப்பி அதனை பெற்றுக்கொண்ட பிரதிவாதி எவ்வித பதில் அறிவிப்பும் அனுப்பாமல் உள்ளதில் இருந்தே தாவா கடனுறுதிச்சீட்டை வாதிக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்து கடன் பெற்றுள்ளார் என்பது நிரூபணமாகிறது என்று வாதி தரப்பில் வாதம் முன்வைக்கப்பட்டது. வாதி அனுப்பிய வா.சா.ஆ.2 அறிவிப்புக்கு பிரதிவாதி பதில்

அறிவிப்பு கொடுக்கவில்லை என்ற காரணத்தினால் மட்டுமே வாதிக்கு பிரதிவாதி தாவா கடனுறுதிச்சீட்டை எழுதிக்கொடுத்து கடன் பெற்றுள்ளார் என்று தீர்மானிக்க முடியாது. வாதியிடம் பிரதிவாதி கடன் பெற்றுக்கொண்டு தாவா கடனுறுதிச்சீட்டை வாதிக்கு எழுதிக்கொடுத்தார் என்பதை எவ்வித ஐயத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்ய வேண்டிய பொறுப்பு வாதிக்குத்தான் உள்ளது. தாவா கடனுறுதிச்சீட்டை வாதிக்கு பிரதிவாதி எழுதிக் கொடுத்து வாதியிடம் கடன் பெற்றார் என்பதை வாதி நிரூபணம் செய்யத்தவறிவிட்டார். ஆதலால் வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து எழுவினாக்கள் 1 முதல் 3 வரையிலானவைகளுக்கு தீர்வு காண்கிறது.

14..<u>எழுவினா-4</u>

எழுவினாக்கள 1முதல் 3 வரையிலானவைகளுக்கு காணப்பட்டுள்ள தீர்வின் அடிப்படையிலும், வழக்கின் தன்மை கருதியும் வழக்கின் செலவுத்தொகையை தரப்பினர்கள் அவரவரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், தரப்பினர்களுக்கு வேறு பரிகாரங்கள் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்து எழுவினா- 4 க்கு தீர்வு காண்கிறது.

முடிவில் இவ்வழக்கானது செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2019-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 01 -ம்நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/- இ. செல்வராஜ், (01.02.2019)

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி.

<u>பின் இணைப்பு</u>

<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>

| | |
|---|---|
| வா.சா.1. | திரு. ஆர். வேணுகோபாலன் ( வாதி) |
| வா.சா.2 | திரு. கிருஷ்ணமூர்த்தி |

<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள்</u>

| | |
|---|---|
| பி.சா.1 | திரு. ஜெயராமன் ( பிரதிவாதி) |

<u>வாதி  தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 06.04.2015 | வாதிக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்த கடனுறுதிச்சீட்டு பத்திரம் |
| வா.சா.ஆ.2 | 30.05.2017 | வாதி வழக்கறிஞர்மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பின் நகல். |
| வா.சா.ஆ.3 | - | வாதி அனுப்பிய அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டையின் நகல் |
| வா.சா.ஆ.4 | - | வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள வா.சா.2-ன் கையொப்பம் மட்டும் |

<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்</u> - இல்லை-

ஓம்/- இ. செல்வராஜ், (01.02.2019)
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி.